நாடி
Pulse of the Singapore Muslim Community
நாடி 12 ஹிஜ்ரி 1431 ரமலான் ஆகஸ்ட் 2010
இலவசம்

# அனைவர்க்கும் பொன்னான நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகள்



# தீவிரவாதப் போக்குகளை முஸ்லிம் சமூகம் முறியடிக்க வேண்டும் - முயிஸ் அறிவிப்பு

## மூன்று அம்சங்களை பின்பற்ற முஸ்லிம் விவகார அமைச்சர் பரிந்துரை

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று முயிஸ் வலியுறுத்தியிருக்கிறது. தீவிரப் போக்குகளையும் தீவிரவாதக் கருத்துகளையும் சமூகம் முறியடிக்க வேண்டும். அதற்கான செயல்முறைகளை தொடர்ந்து பரிசீலிக்கவிருப்பதாக முயிஸ் தெரிவித்துள்ளது. தீவிரப்போக்கை வளர்த்துக் கொண்ட மூவர் அண்மையில் அடையாளம் காணப்பட்டதே அதற்குக் காரணம். முழுநேர தேசிய சேவையாளரான முஸ்லிம் இளைஞர் ஒருவர் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருப்பதாகவும், மேலும் இருவருக்குக் கட்டுப்பாட்டு உத்தரவு விதிக்கப்பட்டிருப்பதாகவும் உள்துறை அமைச்சு 6.7.2010 அன்று அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து, சமூகத்தில் சுயமாக தீவிரப்போக்கை வளர்த்துக் கொள்ளக்கூடிய மிரட்டலை மிகுந்த விழிப்புடன் கண்காணிக்கும்படி சமயத் தலைவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், பெற்றோர் ஆகிய முத்தரப்பினரையும் இஸ்லாமிய சமய மன்றம்-முயிஸ் கேட்டுக் கொண்டது.

இளைஞர்களின் போக்கில் ஏற்படும் மாற்றங்களை பெற்றோரும் பெரியவர்களும் அடையாளம் கண்டு, அதிக அக்கறையுடன் அவர்களுக்குச் சரியான உதவியும் வழிகாட்டுதலும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும், குறிப்பாக சொந்த வாழ்க்கையில் இக்கட்டான நிலை ஏற்படும்போது என்று முயிஸ் அறிக்கை வலியுறுத்தியது.

சிங்கப்பூர் முஸ்லிம்கள் தீவிரவாதக் கருத்துக்களின் பரவலை எதிர்கொள்ள முயிஸின் அஸாடிஸா அங்கீகாரத் திட்டம், முழுநேர மார்க்கக் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சாதன வள நிலையம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் முயிஸ் தெரிவித்தது.

இஸ்லாத்தின் பேரில் தீவிரவாதத்தைப் பரப்புவதாகத் தென்படும் எவரையும் சிங்கப்பூர் முஸ்லிம்கள் முன்கூட்டியே முயிஸிடம் தெரிவிக்க வேண்டும். அதோடு, முறையான தகுதி பெற்ற மார்க்க ஆசிரியர்களை மட்டுமே பணியில் அமர்த்துமாறு சமூகத்திற்கு முயிஸ் நினைவுறுத்தியது. அங்கீகாரச் சான்று பெற்ற மார்க்கக் கல்வி ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் முயிஸ் இணையத் தளத்தில் இடம் பெற்றுள்ளது. இணையத்தின் மூலம் வரும் மிரட்டல்களை எதிர்கொள்ள முயிஸ் அதன் பல்வேறு இணையச் சேவைகளின் மூலம் இளையர்களைத் தொடர்ந்து ஈடுபடுத்தும்.

சமய விவகாரங்கள் குறித்த தேடல்களை இளையர்கள் கலந்து பேச aLIVE.SG, INVOKE.SG ஆகிய இணையத் தளங்களை முயிஸ் ஏற்கனவே தொடங்கியுள்ளது.

### அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹீம்

சிங்கப்பூர் முஸ்லிம்கள் தீவிரப்போக்கை வளர்த்துக் கொள்ளாமல் தடுக்க பயன்மிக்க நடைமுறைகள் இருப்பினும் அவற்றை மேலும் வலுவாக, சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்று முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹீமும் எடுத்துரைத்திருக்கிறார்.

இங்குள்ள முஸ்லிம்கள் தீவிரப்போக்கை வளர்த்துக் கொள்ளாமல் தடுக்க பயன்மிக்க நடைமுறை உள்ளது. சமயத் தலைவர் முஃப்தி, மார்க்கக் கல்வி ஆசிரியர்கள், இஸ்லாமிய சமய மன்றம் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களை அது அடிப்படையாகக் கொண்டுள்ளது. சரியான பாதையில் செல்வதற்கு ஆலோசனை பெறவும், தவறான பாதையில் வழிதவறிச் செல்பவர்களைப் பற்றி தகவல் தெரிவிக்கவும் இந்த மூன்று அம்சங்களையும் முஸ்லிம்கள் நாடலாம் என்று அவர் கூறியுள்ளார்.

"கைது நடவடிக்கை குறித்து முஸ்லிம்கள் உணர்ச்சிவசப்படக் கூடாது. இது போன்ற சம்பவங்களை, சவால்களை எவ்வாறு

கையாள்வது என்பதை சமயத் தலைவர்கள் புலப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு சம்பவமும் கண்டிப்பாக புதிய சவால்களையும், பதில் நடவடிக்கைகளையும் எழுப்பும். எனவே, இவற்றை நாம் தொடர்ந்து ஆராய்ந்து சீர்செய்ய வேண்டும்.

"உணர்ச்சிவசப்படாமல் இருப்பது முக்கியம். எனினும் நாம் முறையாகச் செயல்பட்டாக வேண்டும். தீர்க்கமான, விவேகமான, நிதானமான முறையில் செயல்பட வேண்டும். இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் நாம் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு யாரும் உத்தரவாதம் தர முடியுமா என்றால் முடியும் என்று நான் நினைக்கவில்லை" என்று செய்தியாளர் கூட்டத்தில் டாக்டர் யாக்கூப் இப்ராஹீம் தெரிவித்தார்.

முயிஸ் அதன் கல்வித் திட்டத்தைச் சீரமைத்திருக்கிறது. அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. அதன் தொடர்பான நடைமுறைகளை முயிஸ் தொடர்ந்து பரிசீலிக்கும். முஸ்லிம் சமூகத்தின் மையங்களான முயிஸ், மார்க்கக் கல்வி ஆசிரியர் அங்கீகரிப்புத் திட்டம் போன்றவற்றை பொதுமக்கள் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதே இலக்கு என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# அனைத்துலக முஸ்லிம் கலாசார மாநாடு

முஸ்லிம் கலாசாரம் குறித்த அனைத்துலக மாநாடு அரிய சிந்தனைகளை அள்ளி வழங்கியது. ஜூலை 14 அன்று தொடங்கிய மூன்று நாள் மாநாட்டில் 23 நாடுகளைச்சேர்ந்த சமூகத் தலைவர்களும் அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

மூத்த அமைச்சர் கோ சோக் தோங் மாநாட்டைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

சிங்கப்பூர் போன்ற பல கலாசார சமூகத்தில் அமைதியைக் கட்டிக்காக்க அரசாங்கம் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்துத் தரப்புகளும் முனைப்புடன் பங்காற்ற வேண்டும். மற்ற உலக நாடுகளைப் போன்றே சிங்கப்பூரிலும் சமயப் பற்று வளர்ந்து வருகிறது. சமயம் சார்ந்த கலந்துரையாடலையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதில் அரசாங்கம் முக்கிய பாங்காற்றுகிறது என்று திரு. கோ கூறினார்.

சமயச் சார்பற்ற பொதுச்சூழலையும் அரசாங்கம் நிலைநாட்டி வருகிறது. அனைத்து சமயங்களைச் சேர்ந்த சிங்கப்பூரர்களும் தொடர்ந்து சகிப்புத்தன்மையுடனும் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரின் பல இன, பல சமயச் சூழலை முஸ்லிம்கள் மதித்து நடக்கின்றனர். அடுக்கு மாடி வீடுகளில் பல இன மக்களும் நெரிசலாக வாழ்ந்தாலும் ஒருவர் மற்றவரின் சமயப் பழக்க வழக்கங்களையும், உணவு முறைகளையும் உணர்ந்து இணக்கமாக வாழ்கின்றனர். சமூகப் பிணைப்பில் பெரும்பான்மைச் சமூகத்தினருக்கும் முக்கிய பங்கு இருக்கிறது. குறிப்பாக சீனர்களின் போக்கும் பொறுப்பும் முக்கியம்.

பெரும்பான்மையினர் தங்கள் ஆதிக்கத்தைப் பயன் படுத்தி சிறுபான்மை யினரின் நலனை மட்டுப்படுத்தினால் இன்று நாம் அனுபவிக்கும் சமூகப் பிணைப்பு நம்மிடையே நிலைத்திருக்காது. எனவே அமைதியை நிலைநாட்டுவதில் அனைத்துத் தரப்பும். பங்காற்ற வேண்டும் என்று மூத்த அமைச்சர் கூறினார்.

# வாழ்நாள் சாதனையாளர் கலைஞர் காசிம்

சிங்கப்பூர் கலையுலகில் அரைநூற்றாண்டுக்கு மேலாக கலைத்துறையில் பணியாற்றித் தடம் பதித்துள்ள காசிம் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார் அதிபர் எஸ்.ஆர்.நாதன்.

O.S.முகம்மது காசிம் அவர்களுக்கு வயது 72. 1955-ல் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். அன்றைய சிங்கப்பூர் வானொலி அவருடைய திறனை அடையாளம் கண்டு ஒலிபரப்புச் சேவையில் ஈடுபடுத்தியது. 1957முதல் அவர் நாடாளுமன்ற செய்தியறிக்கை உள்ளிட்டவற்றை வானொலியில் தனது வளமான குரலில் படித்து வந்தார். நூற்றுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களின் பட்டியல் அவரிடம் இருக்கிறது.

சிங்கப்பூரில் 1961ல் தொலைக்காட்சி தொடங்கப்பட்டபோது, அதன் நிகழ்ச்சிகளில் இடம் பெற்றுவந்தார். ஏறத்தாழ ஐம்பது தொலைக்காட்சி நாடகங்களில் நடித்துள்ளதாக 'நாடி'யிடம் தெரிவித்தார் காசிம்.

அடுத்த கட்டமாக அமைந்தது அவருடைய மேடை நாடகங்கள். நடிப்போடு இயக்குநராகவும் காசிம் பொறுப்பேற்றிருந்தார். இன்பக் கனவு அவருடைய முதல் மேடை நாடகம். கவிஞர் க.து.மு.இக்பால், கவிஞர் கடையநல்லூர் ஜமீலா உள்ளிட்ட இலக்கிய ஆர்வலர்களுடன் இணைந்து இக்பால் இளைஞர் நூல் நிலையத்தை உருவாக்குவதற்கு நிதிதிரட்ட மேடை நாடகம் நடத்தியதை நினைவு கூர்ந்தார் காசிம். அவருடைய மேடை நாடகங்களின் எண்ணிக்கை சுமார் 50.

'கலியாணமாம் கலியாணம்' மேடை நாடகம் 1972-ல் காசிமுக்கு சிறந்த நடிகர் விருதைத் தேடித்தந்தது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு 1982ல் நாட்டின் சிறந்த நடிகருக்குரிய விருதைப் பெற்றார். கலாசார துணையமைச்சர் ஃபோங் ச்சி அந்த விருதை வழங்கினார்.

தொலைக்காட்சி தொடர் நாடகத்தை தயாரிக்கும் பணியிலும் முனைப்பாக ஈடுபடத் தொடங்கினார், நமது O.S.முகம்மது காசிம். நடிகர் விவேக் முதலானோரை ஈடுபடுத்தி 1990ல் அவர் தயாரித்த மாப்பிள்ளை பி.ஏ. தொலைக்காட்சித் தொடர் நாடகம் 13 வாரம் ஒளிபரப்பப்பட்டது.

திரைப்படங்களைத் தயாரிக்கும் பணியிலும் காசிம் முனைந்தார். 1980ல் நம்ம




ஊரு பொண்ணுங்க படம் திரையிடப்பட்டது. முந்தானை மந்திரம் எனும் மற்றொரு படம் இன்னும் வெளியிடப்படவில்லை.

## சமூகப் பணிகள்

கலைத் துறையில் மட்டுமின்றி சமூகப் பணிகளிலும் காசிம் பங்காற்றி வந்துள்ளார். 1988 முதல் 1992 வரை சிங்கப்பூர் கலைஞர் சங்கத்தின் தலைவராக அவர் பொறுப்பு வகித்தார்.

தொழிற்சங்கப் பணிகளிலும் காசிம் ஈடுபட்டிருந்தார். திரு.கந்தசாமி பொதுச் செயலாளராக விளங்கிய AUP எனப்படும் தொழிற்சங்கத்தின் டிவிஷன்-4 ஊழியர் பிரிவின் தலைவராகப் பணியாற்றியதாக நாடியிடம் அவர் கூறினார்.

O.S.முகம்மது காசிம் அவர்கள் சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவராகவும் 1988 முதல் 1992 வரை இருந்துள்ளார்.

மாநாடுகளில் பங்கேற்ற அனுபவங்களையும் காசிம் பகிர்ந்து கொண்டார். தஞ்சையில் 1995ல் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் அவரும், கலைஞர் சங்கத் தலைவர் ந.வரதனும் சிங்கப்பூரின் 60 ஆண்டு கால கலை வளர்ச்சியை விளக்கும் கண்காட்சியைப் படைத்தனர்.

அதிபர் எஸ்.ஆர்.நாதன் தனக்கு வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது நம் சமூகத்திற்குரிய விருது எனக் கருதி மகிழ்வதாகக் கூறினார் காசிம்.

# கடையநல்லூர் ஜமீலாவின் எழுத்துப் பணி

## கோ.அ.மைமூன்

ஒரு புரட்சிப் பெண் ஜமீலாவின் பெயரை தமது புனைபெயராகக் கொண்ட எழுத்தாளர் P.N. ஷம்சுதீன் அவர்களின் நூலை இந்த மாதர் ஆண்டில் வெளியிடுவது மிகப் பொருத்தமான ஒன்றாகும். நூலின் பெயர் 'ஊமைக் காயங்கள்'. தலைப்பைப் பார்த்த மாத்திரத்தில் எழுத்தாளர் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களை சந்தித்த முதிர்ந்த அனுபவசாலி என்பதைச் சட்டென உணர்ந்து கொள்ளலாம்.

இவர் இதுவரை எட்டு நூல்களை எழுதியுள்ளார்.அது மட்டுமல்ல, இவரது எழுத்துப் படைப்பிற்காக பல பரிசுகளும் விருதுகளும் பெற்றிருக்கிறார். அதில் உயர்வாகச் சொல்லவேண்டும் என்றால், *2005-ஆம் ஆண்டு* தேசியக் கலைகள் மன்றமும், சிங்கப்பூர் பிரஸ் அறநிறுவனமும் இணைந்து நடத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருககிறார். முதல் பரிசு இவரது கவிதைத் தகுதியை நமக்கு தெளிவாகக் காட்டுகிறது.

P.N. ஷம்சுதீன் அவர்கள், அச்சு வசதிகள் அதிகமில்லாத காலத்தில் கையெழுத்து இதழை உருவாக்கி வினியோகித்த செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. கடையநல்லூர் ஜமீலாவின் ஊமைக்காயங்கள் நூலைப் படிக்கின்றபோது மனித ஏக்கங்களையும், மனக்கிடக்கைகளையும் தத்ரூபமாக வடித்திருக்கும் ஆற்றல் தெளிவாகத் தெரிகிறது.

ஒரு வலுவான உண்மையை இந்நூல் நமக்கு உணர்த்துகிறது. மனிதர்களுக்கிடையே ஏற்படும் விரிசல். நண்பர்களுக்கிடையே ஏற்படும் பூசல். குடும்ப உறுப்பினர்க்கிடையே ஏற்படும் குமைச்சல். இவையாவும் நாம் அன்றாடம் காணும் நிகழ்வுகள். இவற்றைத் தவிர்க்க முடியாது என்றாலும். இவற்றுக்கு அவ்வப்போது தீர்வு கண்டு, மனிதகுலம் மகிழ்ச்சியாக வாழ்ந்திட வேண்டும் என்ற பெரிய தத்துவத்தை இந்நூல் எடுத்துரைக்கிறது. குடும்ப மகிழ்ச்சிக்கு அன்பும், விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையும் தானே அவசியம்!

இளமை மாறி முதுமையின் தொடக்கத்தில் இருக்கும்போது ஏற்படும் சங்கடங்களை தெளிவு எனும் கவிதை மூலம் வடித்திருப்பது நெஞ்சைத் தொடுகிறது.



ஞாபக சக்தி கொஞ்சம் கொஞ்சமாக
மங்கி வருகிறது
தெளிவில்லாப் பேச்சும்
தூர விலகும் உறவும்
கொஞ்சம் தெரிகிறது தெளிவாய்

என்ற வரிகள் முதுமைக் கோலத்தை எடுத்துரைத்தாலும், முதுமையைப் பக்குவமாகக் கையாண்டு வெற்றி பெற வேண்டும் என்ற உண்மையையும் நமக்கு உணர்த்துகிறார். மேலும் நூலாசிரியரின் இளமைக் கால அனுபவங்களையும் ஏக்கங்களையும் வெளிப்படுத்தும் இன்னும் ஒரு கவிதையும் என்னை மிகவும் கவர்ந்து விட்டது.

பள்ளி நாட்களில் என்னோடு
கைகோர்த்து விளையாடிய சிநேகிதர்கள்
சோறும் பாலும் தந்ததற்காகத்
தேசிய கீதத்தை
உரக்கப் பாடிய பகல்கள்..

என்ற கவிதை வரி மீண்டும் நாம் குழந்தையாகப் பிறந்திட மாட்டோமா என்ற ஏக்கத்தைத் தோற்றுவிக்கிறது.

இப்படி கற்பனை வளமும், சொல்லாட்சியும் மனித மனங்களை அப்படியே பிரதிபலித்துக் காட்டும் பாங்கும் நூலில் உள்ள தனிச்சிறப்புகள் ஆகும். முன்னோடி எழுத்தாளரான கடையநல்லூர் ஜமீலாவின் எழுத்துப் பணியைப் போற்றுவது சமூகத்தின் கடமை. அக்கடப்பாட்டை செவ்வனே செய்துள்ள இந்தியக் கலைஞர் சங்கத்தை மனதாரப் பாராட்டுகிறேன்.

ஆசியான் கவிஞர் க.து.மு. இக்பால் அவர்கள் நூலாசிரியரைப் பற்றி இவ்வாறு கவிதை புனைந்திருக்கிறார்:

மடைதிறந்த வெள்ளம்போல் அரைநூற்றாண்டாய் மனம் திறக்கும் சிந்தனையை எழுதுகின்றார்...

*[சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்க ஏற்பாட்டில் 30.4.2010 மாலை நடைபெற்ற நூல்வெளியீட்டு விழா உரையின் ஒரு பகுதி]*

# செம்மொழிச் செல்வர் காயிதெமில்லத் இஸ்மாயில் சாஹிப்

முதல் மனிதன் பேசிய மூத்த மொழி தமிழ் மொழியாகத்தான் இருக்க வேண்டும்! வேறு மொழியினைப் போல் இடம் பெயர்ந்து வராமல் இருந்த இடத்திலிருந்தே தோன்றியது தமிழ் மொழி! பதினேழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழின் பொற்காலம் தோன்றி விட்டது!

செம்மொழியான நம் தமிழின் தொன்மைச் சிறப்பையும் வளத்தையும் இவ்வாறு சொற்சித்திரமாக வரைந்தார் கண்ணியமிகு காயிதெ மில்லத் இஸ்மாயில் சாஹிப் அவர்கள்.மறுக்க முடியுமா? லெமூரியா என்ற கண்டம் இருந்தது. கடற்பெருக்கினால் அது சிதைந்தது. அந்தக் கண்டத்தில் உலவிய முதல் மனிதர் ஆதமின் பெயரால் இலங்கையில் ஆதம் மலை இருக்கிறது. அவருடைய புதல்வர்கள் சண்டையிட்டு மறைந்த நினைவிடம் இராமேசுவரத்தில் உள்ளது. ஆதம்அந்நாளில், அங்கு பேசிய மொழி தமிழே என்பது ஆய்வாளர்களின் முடிவு.

செந்தமிழே இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையிலும் நாடாளுமன்றத்திலும் முழக்கமிட்டவர் நெல்லைத் தமிழர் காயிதெமில்லத். அரிய வரலாற்றுப் பதிவு அது.

“1947ல் அரசியல் நிர்ணய சபையில் நான் தமிழுக்காக-தாய்மொழிக்காக வாதாடினேன் என்றால், தமிழின் அழகு, இயற்கை, இன்பம், வாய்மை, தரம் இவற்றிற்கான வாதாடினேன் என்பது தான் பொருள். இத்தனை சிறப்புகளும் தமிழுக்கேயன்றி வேறு மொழி எதற்கும் இல்லை என்பதால் தான் இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தமிழ் இருக்க வேண்டும் என்று அப்போது கூறினேன்...” என இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அவர் மொழிந்தார்.

இந்தியா வெள்ளையர் ஆட்சியிலிருந்து விடுபட்டதும் செம்மொழியான தமிழே (Classical Language) தேசிய மொழி என அரசியல் நிர்ணய சபையில் முழங்கினார் கண்ணியமிகு காயிதெமில்லத்.

“இந்த நாட்டு மண்ணில் பேசப்பட்ட மொழிகளில் மிகவும் பழமையானதும், ஆரம்ப காலத்திலிருந்து பேசப்பட்டுவரும் மொழியாக இருப்பதும் தமிழ்தான். அதாவது, திராவிட மொழிகளே இந்நாட்டின் புராதன மொழி என நான் துணிந்து கூறுகிறேன். ‘இந்நாட்டு மண்ணில் பேசப்பட்ட முதல்மொழி திராவிட மொழியே என்ற எனது கூற்றை எந்த வரலாற்றாசிரியராலும் மறுக்க முடியாது; எந்த புதைபொருள் ஆராய்ச்சியாளராலும் எதிர்க்க முடியாது. உயர்தரமான இலக்கிய வளங்களும், நயங்களும் நிறைந்த மொழி தமிழ். இது மிகவும் புராதன மொழி, இது எனது தாய்மொழி என்பதையும்



தெரிவித்துக் கொள்கிறேன். இம் மொழியை நான் நேசிக்கிறேன்; இம் மொழியைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன்!”

இந்திய நாடாளுமன்றத்தில் காயிதெ மில்லத் தமிழுக்காக வாதாடிய போது, ஹிந்தி மொழி ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கலாம் என மற்றொரு அணி வலியுறுத்தியது. வாக்கெடுப்பு நடைபெற்றபோது ஒரு வாக்கு வித்தியாசத்தில் ஹிந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்காகக் கையை உயர்த்தியவர் அன்றைய ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்.

காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் 1950-60களில் இருமுறை சிங்கப்பூருக்கு வருகையளித்து பல நிகழ்ச்சிகளில் தமிழில் இனிய உரையாற்றியதை மூத்த தலைமுறையினர் நன்கறிவர்.

அவர் 1966 ஜுலை மாதம் நடைபெற்ற திருக்குர்ஆன் மாநாட்டில் கலந்து கொண்டார். தமிழ் முஸ்லிம் ஜமாஅத் ஏற்பாட்டில் தேசிய அரங்கில் நிகழ்ந்த அந்த மாநாட்டில் முன்னைய பிரதமர் (மதியுரை அமைச்சர்) திரு லீ குவான் இயூ தொடக்கவுரையாற்றினார். அடுத்து காயிதெ மில்லத் ஆற்றிய ஒரு மணிநேர ஆங்கில உரையைக் கேட்டு ரசித்த பிறகு அரங்கிலிருந்து புறப்பட்டார் திரு லீ. தொடர்ந்து தமிழில் உரையாற்றி விழாவைச் சிறப்பித்தார் காயிதெ மில்லத்.

இஸ்மாயில் சாஹிப் அவர்களை வரவேற்றுச் சிறப்பித்த மற்றொரு அமைப்பு சிங்கப்பூர் மலபார் முஸ்லிம் ஜமாஅத். கேரள மாநில மஞ்சேரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான அவர், தொகுதிக்குச் செல்லாமலேயே மூன்று முறை வெற்றிபெற்ற பெருந்தலைவர் . மலபார் முஸ்லிம் சங்க வரவேற்பு நிகழ்ச்சியிலும் காயிதெ மில்லத் தமிழில் பேசி மகிழ்வித்தார்.

சிங்கப்பூரில் தமிழ் ஆட்சி மொழியாக, அதிகாரத்துவ மொழியாகத் திகழ்வதை மனம் திறந்து பாராட்டியவர் திருநெல்வேலி பேட்டை செம்மொழிக் காவலர் காயிதெமில்லத்.

- **ஜே.எம்.சாலி**

# PHOTO NEWS

# படச் செய்திகள்



Official re-opening of Omar Kampung Melaka Mosque, 4 Jun 2010



Official opening of Al-Mawaddah Mosque, 21 May 2010




MUIS work plan seminar 2010 at SIH, 10 Apr 2010




Official launch of Al-Quran Mushaf Singapore at Sultan Mosque, 30 May 2010



Tilawah & Tahfiz Al-Quran ceremony (national level) for 2010/1431H at Sultan Mosque, 30 May 2010



42nd Mosque Council meeting at Ar-Raudhah Mosque, 24 Apr 2010



Community Engagement Games Day 2010 at SIH, 26 Jun 2010




Rahmatan Lil Alamin Go Green Plant-A-Tree programme at Bedok Town Park, 26 Jun 2010

# தக்கலை தவஞானி பீர் முஹம்மது அப்பா ஞானப் புகழ்ச்சி விழா

தக்கலை ஞானமேதை ஷெய்கு பீர் முஹம்மது அப்பா அவர்களின் ஆண்டு விழாவை சிங்கப்பூர் தக்கலை முஸ்லிம் அசோசியேஷன் ஜூன் 26 அன்று கொண்டாடியது.

தவஞானி பீர் முஹம்மது அப்பா அவர்களின் ஆண்டு விழாவினை ரஜபுத் திங்கள்தோறும் அவர்களின் தர்காவில் பாரம்பரியச் சிறப்புடன் தக்கலைவாசிகள் கொண்டாடி வருகின்றனர்.

விக்டோரியர ஸ்ட்ரீட் மலபார் பள்ளிவாசலில் இரவு மணி 8.45 முதல் இடம் பெற்ற விழாவில் பீர் அப்பா அவர்களின் ஞானப் புகழ்ச்சி பாமாலை இசைக்கப்பட்டது. ஞானப் புகழ்ச்சியில் 687 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

பதினெண் சித்தர்களில் ஒருவராகப் போற்றப்படும் தவஞானியாரின் தர்ஹா தக்கலையில் அமைந்துள்ளதை அறிவோம். நெல்லை மாவட்ட தென்காசியில் ஆமினா அம்மையார்-சிறுமலுக்கர் தம்பதியின் அன்புச் செல்வராகப் பிறந்து முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தார்கள். மலைக்காடுகளில் பல்லாண்டு ஞானத் தவ வாழ்வு நடத்திய பீர் முஹம்மது அப்பாவின் பெயரில் அமைந்தது தான் ஆனைமலையிலுள்ள பீர்மேடு என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அப்பா அவர்கள் வாழ்க்கையின் பிற்பகுதியை தக்கலையில் கழித்து அங்கேயே அடக்கமானார்கள்.

பீரப்பா அவர்கள் 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட அருட்பாக்களை இயற்றியுள்ளார்கள். ஞானப்பால், ஞானப் பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான மணிமாலை, பிஸ்மில் குறம், ஞானக் குறம், ஞானரத்தினக் குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, ஞான நடனம், ஞான முச்சுடர்ப் பதிகங்கள், ஞானத் திறவுகோல், ஞான சித்தி, ஞானக் கண், ஞான விகடச்சமர்த்து, ஞான உலக உருளை, ஞான மலைவளம், மெய்ஞ்ஞானக் களஞ்சியம், திருமெய்ஞ்ஞானச் சரநூல், மெய்ஞ்ஞான அமிர்தக் கலை, திருநெறிநீதம், மஃரிபத்து மாலை, ஈடேற்ற மாலை, ரோசு மீசாக்கு மாலை, மிகுராசு வளம் ஆகியவை அவற்றுள் அடங்கும்.

சிங்கப்பூர் தக்கலை முஸ்லிம் அசோசியேஷன் நடத்திய விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த ஜனாப் அப்துல் காதர் ஷாஹுல் ஹமீது, ஜனாப் ஹாமீம் முஸ்தபா ஹமீது ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். ஆண்டு விழாவை முன்னிட்டு நினைவு நாள் விழா சிறப்பிதழ் ஒன்றை சங்கம் வெளியிட்டு வினியோகித்தது. பீரப்பா அவர்களின் இலக்கிய, வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் அதில் தொகுக்கப்பட்டுள்ளன.

"இஸ்லாமும் தமிழும் சந்திக்கும் கவிஞான




ஊற்று பீரப்பா. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே செய்தி மக்கள் தொடர்பு ஊடகங்கள் பரவல் பெறாத அந்நாளில் ஞானப்புகழ்ச்சியில் திருக்குர்ஆனின் ஞான விளக்கத்தையும், சூரத்துல் பாத்திஹாவின் சிறப்பை துஆ இரப்பிலும் உலக மொழி வரலாற்றிலேயே முதன் முதலில் அரபியிலிருந்து தமிழில் படைத்தளித்த பெருமை ஞானமேதை பீரப்பாவுக்கே உரியது.

"திருக்கலிமாவின் இருபத்திநான்கு எழுத்துக்களின் அருள் பகிர்வினை ஞானமணி மாலையிலும், பிஸ்மியில் இடம் பெறும் பத்தொன்பது அரபு எழுத்துக்களின் பத்தொன்பது வகை மெய்ஞ் ஞானத்தை பிஸ்மில் குறத்திலும், "நூரே முஹம்மதியாவின் தத்துவத்தை ஞானப்பூட்டிலும், ஆன்மீக உயர்நிலை விண்ணேற்றத்தை மிகுராசு வளத்திலும், ஞான உரையாடலை ஞானரத்தினக் குறவஞ்சியிலும், இன்னும் பலப்பல ஞான நூல்களையும் தந்தருளிய் அருள்ஞானக் கடல் பீரப்பா.

"இலங்கை, சிங்கப்பூர், வளைகுடா நாடுகள் என இஸ்லாமியர்கள், தமிழர்கள் வாழும் உலகின் பல பகுதியிலும் மானுட நேயம் கலந்து புகழ்மணம் பரப்பிக் கொண்டிருக்கும் ஞானச் செம்மல்."

இவை நினைவு நாள் விழா சிறப்பிதழில் இடம் பெற்றுள்ள சில வரிகள். அப்பா அவர்களின் சில பாடல்களும் மேற்கோள்களாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## கடையநல்லூர் முஸ்லிம் சங்கத்தில் அப்பா விழா

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சங்கமும் தக்கலை ஞானியார் நினைவு இசை-சொற்பொழிவு நிகழ்ச்சியை 4.7.10 மாலையில் அதன் தெலுக் பிளாங்கா அலுவலக அரங்கில் நடத்தியது. சங்கத்தின் செயலாளர் அல்ஹாஜ் மு.அ.மசூது வரவேற்புரையாற்றினார். தலைவர் அல்ஹாஜ் நஸீர் கனி சிறப்பு விருந்தினர்களான ஜனாப் ஹாமீம் முஸ்தபா ஹமீதுக்கும், ஜனாப் அப்துல் காதர் ஷாஹுல் ஹமீதுக்கும் பொன்னாடை அணிவித்தார்.

சிங்கப்பூர் ஜாமியாவின் துணைத் தலைவர் முகம்மது சலீம் அவர்களின் அறிமுக உரையைத் தொடர்ந்து விருந்தினர்களின் ஞானப்புகழ்ச்சி சொற்பொழிவும் இசையும் இடம் பெற்றன.

பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சியின் உள்ளடக்கத்தை சில கோணங்களில் எடுத்துரைத்தார் சொற்பொழிவாளரும் இதழாசிரியருமான ஹாமீம் முஸ்தபா. பிரார்த்தனை என்று பொதுவாக நாம் கூறினாலும் அதை வரையறுக்க முடியாது. சூஃபி ஞானியான பீர் முஹம்மது அப்பா அவர்களின் ஞானப்புகழ்ச்சி பிரார்த்தனை வகைகளின், முறைகளின் ஒட்டுமொத்த ஞானக்களஞ்சியம் என்பதை பாடல் மேற்கோள்களுடன் விளக்கினார் ஹாமீம் முஸ்தபா. அந்தப் பாடல்களை இனிய குரலில் பாடி அரங்கை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார் தக்கலை அப்துல் காதர் ஷாஹுல் ஹமீது.

---

# இஸ்லாமிய நிதிச் சந்தையும் வங்கிகளும் விரிவடையும்

இஸ்லாமிய நிதித்துறை வெகுவேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இருபது ஆண்டுகளுக்குள் இந்தத் துறை அடைந்துள்ள உலகளாவிய வளர்ச்சியும் செல்வாக்கும் நிதித்துறை வல்லுநர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இஸ்லாமிய வங்கிகள் இன்று சிறப்பாக இயங்கிவருகின்றன. கடந்த 16 ஆண்டுகளாக பஹ்ரேனில் நடைபெற்றுவரும் இஸ்லாமிய வங்கித் துறை மாநாடு வலுவான நிதித் தளங்களை உருவாக்கித் தந்திருக்கிறது.

சிங்கப்பூரில் ஜுன் மாதம் முதல்முறையாக நடைபெற்ற இஸ்லாமிய வங்கித்துறை மாநாடு பல அரிய சிந்தனைகளையும் செயல் திட்டங்களையும் வழங்கியிருக்கிறது.இஸ்லாமிய நிதித்துறை உலக நிதித்துறையில் மேலும் பெரிய மையமாகப் பங்காற்றவிருக்கிறது என்று மாநாட்டைத் தொடங்கி வைத்துப்பேசிய வர்த்தக, தொழில் அமைச்சர் லிம் ஹங் கியாங் கூறினார்.

அதிகரித்து வரும் விழிப்புணர்வும் நிதி நிலையங்களின் ஆற்றலுமே இதற்கு முக்கிய காரணங்கள். வழக்கமான நிதித்துறையைவிட இஸ்லாமிய வங்கித்துறை இருமடங்கு அதிக வேகத்தில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று திரு லிம் குறிப்பிட்டார்.

இஸ்லாமிய நிதித்துறையின் மொத்த சொத்து மதிப்பு கூடிய விரைவில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலரைத் தாண்டிவிடும் என சில ஆய்வுகள் கணித்துள்ளன. அந்த நிதித்துறையை மேம்படுத்துவதில் மேலும் பரந்த நோக்கில் பங்காற்ற சிங்கப்பூர் தயாராக இருப்பதாக திரு. லிம் தெரிவித்தார். மத்திய கிழக்கும் ஆசியாவும் ஒன்றுக்கொன்று வளர்ச்சிக்குத் துணைபுரிந்து, பரஸ்பர நலனுக்காகப் புதிய வளர்ச்சித் துறைகளை ஆராயலாம் என்றும் பரிந்துரைத்தார். எனினும், இரு ஆண்டுகளுக்கு முன் நிதி நெருக்கடிநிலை கற்றுத்தந்த பாடங்களை இஸ்லாமிய நிதித்துறை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வர்த்தக, தொழில் அமைச்சர் எச்சரித்தார்.

அதோடு, மூலதன வளம், சந்தை ரொக்கப் புழக்கம், இடர் நிர்வாகம் போன்ற விவகாரங்களுக்கும் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். இச்சவால்களைச் சமாளிக்க தொழில் துறையில் வலுவான ஒத்துழைப்பு நிலவவேண்டும். பஹ்ரேனில் ஆண்டுதோறும் நடைபெறும் உலக இஸ்லாமிய வங்கித் துறை மாநாட்டின் ஆசிய உச்சநிலைக் கூட்டம் இனிமேல் ஒவ்வொரு ஆண்டும் சிங்கப்பூரில் நடைபெறும். அந்தக் கூட்டம் காலப் போக்கில் இஸ்லாமிய நிதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆசியாவுக்கும் மத்திய கிழக்கும் இடையில் இன்னும் அதிக ஈடுபாட்டைத் தூண்டும் என சிங்கப்பூர் நம்பிக்கை கொண்டுள்ளது என்று திரு லிம். குறிப்பிட்டார்.

இஸ்லாமிய நிதித் துறை-சந்தை வளர்ச்சிக்கு சிங்கப்பூர் நாணய வாரியம் (MAS) கடந்த ஆண்டு மே மாதம் புதிய விதிமுறைகளை வெளியிட்டது. உலகளாவிய ஷரியா வங்கித் தொழில் சந்தையில் சிங்கப்பூரர்கள் கணிசமாகப் பங்கேற்பதற்கு வகை செய்யும் இரண்டு நெறிமுறைகள் அவை. வங்கிகள் பரவலாக இஸ்லாமிய நிதி முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதே அதன் நோக்கம்.

இந்தோனேசியாவில் 5 ஷரியா வங்கிகள் இயங்கிவருகின்றன. மலேசியா இஸ்லாமியப் பங்குப் பத்திரம். வங்கிக் கணக்கு, நிதிச் சந்தை நடவடிக்கைகளை பரந்த அளவில் மேற்கொண்டுவருகிறது.

சென்ற ஆணடில்தான் சிங்கப்பூர் உள்ளூர் இஸ்லாமிய நிதிச் சந்தைப்பணியைத் தொடங்கியது. சிங்கப்பூரை அனைத்துலக ஷரியா வங்கி மையமாக மேம்படுத்த இத்தகைய முயற்சிகள் உதவும் என்று நாணய வாரியத்தின் நிர்வாக இயக்குநர் அப்போது கூறினார்.

இஸ்லாமிய நிதிச் சந்தையும் வங்கிகளும் மென்மேலும் பன்மடங்கு விரிவடையும் என்று நிதித்துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

# சாதனை விருதுச் செல்வர் மு.அ.மசூது

நாடறிந்த நற்பணியாளர், நல்லாசிரியர் மு.அ. மசூது அவர்கள் நமது மொழிக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய சேவையை அங்கீகரித்து இந்தியக் கலைஞர் சங்கமும், பூன் லே இந்தியர் நற்பணி மன்றமும் அண்மையில் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளன.

சிங்கப்பூரில் மட்டுமல்ல, மலேசியா, தமிழ்நாடு, இலங்கை, தாய்லாந்து முதலான நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள் மசூது அவர்களின் கல்வி, மொழி, சமூக சேவையை அங்கீகரித்து 1995 தொடங்கி-அவ்வப்போது விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளன.

பாரதிதாசன் விருது, சமூக சேவைக்கான சமய நல்லிணக்க விருது, நற்பணி நாயகன் விருது, தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் சமூக சேவை விருது, சிறந்த தமிழாசிரியர் விருது, சிங்கப்பூர் ஜாமியாவின் சமூக சேவை விருது ஆகியவை அவர் பெற்ற விருதுகளில் அடங்கும்.

சிங்கை வாழ் தமிழ் முஸ்லிம்கள் தங்கள் தாய்மொழியான தமிழை புழக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, தமிழ் முஸ்லிம்களின் எல்லா நிகழ்ச்சிகளையும் தமிழிலேயே நடத்தியும், நடத்தத் தூண்டியும் வந்திருக்கிறார். சிங்கப்பூரில் தமிழ் வாழும்மொழியாக இருப்பதற்குத் தமிழ் முஸ்லிம்களே முக்கியக் காரணம் என்று பலரும் இன்று பேசுவதற்கு மசூது பின்புலமாக இருந்து பணியாற்றியிருக்கிறார்.

தமிழ் முஸ்லிம்களுக்குத் தாய்ச்சபை வேண்டும்; அதன் மூலம் அரசாங்கத்திற்கு சரியான தகவலை தக்கார் மூலம் வழங்கிட இயலும் என உறுதியாக நம்பி இந்திய முஸ்லிம் பேரவையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.ஏ.ஜப்பாருடன் இணைந்து அமைக்க பெரும்பாடுபட்டார்.

சிறுவர் பராமரிப்பு இல்லங்கள், இறை இல்லங்கள் ஆகியவை புதுப்பொலிவுடன் விளங்க அவற்றைச் சீரமைத்துக் கொடுப்பதில் மு.அ. முக்கிய பங்கு வகித்திருக்கிறார். சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம் சொந்த இல்லம் பெறவும், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சொந்தக் கட்டிடம் வாங்கவும், நாகூர் தர்ஹா மரபுடைமை வளாகம் சீரமைக்கப்படவும் மசூது ஆற்றிய பங்கு அளவிடற்கரியது. இரு சங்கங்களிலும் இவர் முக்கிய பொறுப்பு வகித்து வருகிறார்.

சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம், தமிழர் பேரவை, சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், இந்திய முஸ்லிம் பேரவை போன்ற முக்கிய அமைப்புகளில் மசூது அவர்கள் முக்கிய பொறுப்பு



வகிப்பதுடன், இந்திய முஸ்லிம்களையும் தமிழர்களையும் பிரதிநிதிக்கும் பேராளராகவும் விளங்கி வருகிறார்.

சிங்கப்பூர் மாணவர்களுக்கும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கும் வலுவான மொழி, கலாசாரத் தொடர்பு இருக்க அடித்தளம் அமைத்துள்ளார் மு.அ.மசூது. அதன் விளைவாக சிங்கப்பூர்-தமிழ்நாடு கல்வி, கலாசார பரிமாற்றத் திட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். இத் தொடர்பின் வழி, பல தமிழ் நூல்கள் உருவாக இவர் காரணமாக இருந்துள்ளார். ஆசிரியர் மு.அ.மசூது, உணர்வுகளின் ஊர்வலம், பிறைத்தோணி, புதிய மின்னல்கள் ஆகிய மூன்று நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். மேலும், தமது மாணவர்களுக்கு எழுத்து. இலக்கியத் துறை பயிற்சியளித்து, கிராமியக் கதைகள், பூவானம், மூக்குக் கண்ணாடி ஆகிய மூன்று நூல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்.

மசூது அவர்கள் நியூடவுன் தொடக்கப் பள்ளியில் மூத்த ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழாசிரியராக இருக்கும் அவர், பள்ளியின் துறைத் தலைவராகவும், சிறப்புத் திட்ட ஆசிரியராகவும் விளங்குகிறார்.

தமது வெற்றிக்கு நல்ல நண்பர்களும், தோள் கொடுக்கும் சகோதரர்களும். புரிந்துணர்வு மிக்க குடும்பமும், எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் அருளுமே காரணம் என நன்றிப் பெருக்குடன் குறிப்பிடுகிறார் மு.அ.மசூது.

# செம்மொழி மாநாட்டில் சிங்கப்பூர் சமூக, இதழியல் வளர்ச்சி ஆய்வு

தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் நகரில் கடந்த ஜூன் மாதம் 23-27 தேதிகளில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் சிங்கப்பூர் பேராளர்கள் பலர் கலந்து கொண்டனர். ஜாமியா சிங்கப்பூரின் துணைத் தலைவர் முகம்மது சலீம், நூலாசிரியரும் தமிழவேள் நற்பணி மன்றத்தின் செயலாளருமான எம்.இலியாஸ், இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் தீன் ஆகியோர் பங்கேற்றனர்.

சமூக மேமபாட்டுக்கும் இதழியல் வளர்ச்சிக்கும் சிங்கப்பூரர்கள் ஆற்றிய அரும்பணிகளை எடுத்துரைக்கும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. “சிங்கப்பூர் நாளிதழ் வளர்ச்சியில் தமிழவேளின் பங்கு” எனும் கட்டுரையை ஜனாப் இலியாஸ் ஆய்வரங்கில் வாசித்தார். அந்தக் கட்டுரையை நூலாக அச்சிட்டு அரங்கில் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. தமது முயற்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்ததாக ‘நாடி’யிடம் கூறினார் அவர். உலகச் செம்மொழியாம் தமிழுக்கு மணிமகுடம் சூட்டி மகிழும் நாடு சிங்கப்பூர் எனும் அறிமுக வரியுடன் தொடங்கும் அந்த ஆய்வுக் கட்டுரையில் இடம் பெற்றுள்ள சில தகவல்கள்:



* சிங்கை வர்த்தமானி தமிழ் இதழ் 1875ல் தொடங்கப்பட்டது. ஆசிரியர் சிகு மகுதூம் சாய்பு. சிகு-CIKGU என்பது மலாய்ச் சொல். இதற்கு ஆசிரியர் என்று பொருள். வர்த்தமானி-செய்தி. சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட தென்கிழக்காசிய வட்டாரத்தில் வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகை என்ற பெருமையை ‘சிங்கை வர்த்தமானி’ பெறுகிறது.

* ஜாவி பிரணாக்கான் தென் கிழக்காசியாவின் முதல் மலாய் மொழி நாளிதழ். 1876ல் இதன் ஆசிரியர் முன்ஷி முஹம்மது சையது பின் தாதா முஹ்யித்தின். இவர் ஒரு தென்னிந்திய முஸ்லிம் என்பது வியப்புக்குரிய செய்தி.

* தங்கை நேசன் மாதம் இருமுறை இதழ் 1878, ஞான சூரியன் 1882, சிங்கை நேசன் வார இதழ் 1887 ஆகியவை அடுத்து வெளியிடப்பட்டவை. ஆசிரியர் மகுதூம் சாய்பு சொந்த அச்சகத்தையும் நடத்தினார்.

* 1942ல் வெளியீடு கண்ட மலாயா நண்பன் நாளிதழ் போட்டித் திறன் மிக்க தரமான இதழாக விளங்கியிருக்கிறது. இதன் ஆசிரியர் திரு.கரீம் கனி ஆவார்.

* சிங்கப்பூர், மலேசியாவின் சிகரமான பத்திரிகையாளராகத் திகழ்ந்த கோ.சாரங்கபாணி, தமிழகம் திருவாரூரைச் சேர்ந்தவர். அங்கு உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு சிங்கப்பூருக்கு வந்தார், முன்னேற்றம் வார இதழ், சீர்திருத்தம் மாத இதழ், தமிழ் முரசு, தேசதூதன் முதலான இதழ்களை நடத்தினார். REFORM, Indian Daily Mail ஆங்கில இதழ்களையும் ஆண்டுகள் நடத்தினார்.

* தமிழ்மொழி ஆர்வமும் தேர்ச்சியும் கொண்ட அவரிடம் பணியாற்றிய துணை ஆசிரியர்களின் பட்டியல் நீளமானது. உதாரணத்திற்காகச் சிலர், வை.திருநாவுக் கரசு, திரு. அ.முருகையன், திரு. தி.செல்வ கணபதி, திரு. ஜே.எம்.சாலி, திரு. எஸ்.எஸ். முஹையதீன், திரு. இ.என்.எம்.மெய்தீன், திரு.முருகு சுப்ரமணியம், திரு. ஏர்வாடி இப்ராஹிம்.

* சிங்கப்பூரில் தமிழ் ஓர் அதிகாரத்துவ மொழியாக அமைந்ததற்கு தமிழவேள் பெரும்பங்காற்றியுள்ளார். தமது நாளிதழ் வாயிலாக, கல்வி மேம்பாடு, மொழி உணர்வு, குடும்ப ஒற்றுமை, சமூகச் சீர்திருத்தம், நாட்டுப்பற்று ஆகியவற்றை வலியுறுத்தினார்.

# இந்திய முஸ்லிம் பேரவை - மஸ்ஜித் பென்கூலன் இப்தார் விருந்து

இந்திய முஸ்லிம் பேரவையும் மஸ்ஜித் பென்கூலனும் இணைந்து நடத்திய இப்தார் விருந்து ஆகஸ்ட் 15 அன்று சிறப்பாக நடைபெற்றது. நிதி அமைச்சர் திரு. தர்மன் சண்முகரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.



இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் டாக்டர் தீன் மற்றும் பேரவையின் அனைத்து உறுப்பினர் அமைப்புக்களின் தலைவர்களும், மஸ்ஜித் பென்கூலன் தலைவர் ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல், மூயிஸ் தலைவர் ஹாஜி அலமி மூஸா, நாடாளுமன்றச் செயலர் ஹாஜி மசகோஸ் துல்கிப்லி ஆகியோர் கலந்து கொண்ட அவ்விருந்தில், ஜாமியா சிங்கப்பூர் தலைவர் ஹாஜி அபுபக்கர் மைதீன், மகா கருணா புத்திஸ்ட் சொசைட்டியின் டாக்டர் குணரத்னா மற்றும் சிண்டா, லிஸா போன்ற சகோதர சமய மற்றும் சமூக அமைப்புக்களின் நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

---

# கருணை நோன்பு!

நோன்பை விதித்தது பொதுக்கருணை;
நோய்களனைத்தும் அகன்றோட
நோன்பை நோற்றிடும் நல்வாய்ப்பை
நல்குவ துன்றன் தனிக்கருணை

“விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்தது போன்றே, உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்.”

“ரமலான் மாதம் எத்தகைய மகத்துவமுடையது என்றால், அதில் தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை தீமையைப் பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் உள்ள திருக்குர்ஆன் (என்னும் இவ்வேதம்) அருளப்பட்டது. ஆகவே, உங்களில் எவன் அம்மாதத்தை அடைகிறானோ அவன், அதில் நோன்பு நோற்கவும்...”

“...ஆனால் அக்காலத்தில் உங்களில் யாராகிலும் நோயாளியாகவோ, அல்லது யாத்திரையிலோ இருந்தால் ரமலான் அல்லாத மற்ற நாட்களில் விட்டுப்போன நாட்களின் நோன்பைக் கணக்கிட்டு நோற்றுவிடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு இலகுவான கட்டளையைக் கொடுக்க விரும்புகிறானே தவிர, உங்களுக் கஷ்டத்தை விரும்பவில்லை. தவிர, தவறிய நாட்களைக் கணக்கிடும்படி கட்டளையிட்டதெல்லாம், உங்கள் மீது கடமையாக உள்ள ஒரு மாத நோன்பின் எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்து, அல்லாஹ் உங்களை நேரான பாதையில் நடத்தியதற்காக அவனை நீங்கள் பெருமைப் படுத்துவதற்காகவும், நோய், யாத்திரை போன்ற சந்தர்ப்பங்களில் நோன்பு நோற்காதிருக்க உங்களுக்கு அனுமதியளித்ததெல்லாம் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே!”

## மூயிஸின் ரமலான் செய்தி

மாண்புமிகு ரமலான் நோன்பை நாம் ஒருங்கிணைந்து நோற்று பொலிவுடன் கொண்டாடி மகிழ்வோம் என்பதே இவ்வாண்டு ரமலான் இயக்கத்தின் இலக்கு. அதன் தொடர்பில் மூயிஸ் அரிய பல திட்டங்களைச் செயல்படுத்தியது.

பல இன, சமூக மக்களும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு வசதியாக பள்ளிவாசல்களில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. துணைப்பிரதமர் திரு. வோங் கான் செங், சட்ட அமைச்சர் திரு. சண்முகம், நிதியமைச்சர் திரு. தர்மன் சண்முகரத்தினம் ஆகியோர் பள்ளிவாசல்களுக்கு வருகையளித்து நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இனிமைமிகு ரமலான் நோன்பு இயக்கத்தின் இலக்கை அனைத்து நிகழ்ச்சிகளும் நிறைவேற்றியதாக மூயிஸ் அதிகாரிகள் மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தனர்.